**O.S.No. 120/2018**

**DW1: வெங்கடேசன்** தேதி 11.11.2025

**பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ஓ.ஏ.கிருஷ்ணசாமி முதலியாருக்கு ஓ.ஏ.கே.நாச்சிமுத்து, தனலட்சுமி, ராமலட்சுமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். ஓ.ஏ.கே.நாச்சிமுத்து மனைவி பெயர் ராஜம்மாள். ஓ.ஏ.கே.நாச்சிமுத்துவின் சொந்த சகோதரர் தான் மாரியப்பன். மாரியப்பனின் மகள் தான் வாதி சாவித்திரி என்றால் சரிதான். ஓ.ஏ.கே.நாச்சிமுத்து மற்றும் கிருஷ்ணசாமி முதலியாரின் நேரடி வாரிசு நான் இல்லை என்றால் சரிதான். நான் எந்த வகையில் மேற்படியாருக்கு இரத்த சொந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் ராமலட்சுமியின் மகன். ஆண் வாரிகள் என்ற அடிப்படையில் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாருக்கு ஆண் வழி வாரிசு அல்ல. வளர்ப்பு மகன். என் அப்பா பரமசிவத்தின் சொந்த ஊர் திருப்பூர் மாவட்டம் வாய்ப்பாளையம். ராஜம்மாள் வி.சுப்புராய முதலியாரின் 3 வது மனைவின் மகள் என்றால் சரியல்ல. 2 வது மனைவியின் மகள். அந்த வகையிலும் ஓ ஏ கே நாச்சிமுத்து முதலியாரின் நேரடி வாரிசு நான் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆண் வாரிசு என்று சொல்லவே இல்லை ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் வளர்ப்பு மகன் என்று தான் சொல்கிறேன். 1 ம் வாதி ராஜம்மாள் இறக்கும் போது அவருடைய வயது 93. இறப்பதற்கு 20 வருடத்திற்கு முன்பே ராஜம்மாள் காது மற்றும் வாய் திறன் இழந்து விட்டார் என்றால் சரியல்ல. கடைசி வரை எழுதுவது மற்றும் படிப்பது ஆகிய செயல்களை செய்து வந்தார் என்றால் வயோதிக காரணமாக எழுத மாட்டார் படிப்பார். இந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன். எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் போது ராஜம்மாள் கையெழுத்து போடும் நிலமையில் இருந்தாரா என்றால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார்.

கையெழுத்து போடுவதில் சிரமப்பட்டார் அதனால் கைரேகை வைத்தார். இந்த வழக்கில் ராஜம்மாள் வக்காலத்தில் கையெழுத்து எங்கு போட்டு கொடுத்தார் என்றால் அவர் படுத்த படுக்கையாக இருந்ததால் எனது வழக்கறிஞர் எனது வீட்டிற்கு வந்து அவரிடம் பேசி கைரேகை பெற்றார். எந்த வழக்கறிஞர் முன்பாக கைரேகை வைத்தார் என்றால் திரு.என்.சரவணன் என்பவர் முன்பு வைத்தார். அவ்வாறு ராஜம்மாள் கைரேகை வைக்கும் போது வேறு யாராவது உடன் வந்தார்களா என்றால் வழக்கறிஞர் மட்டும் தான் வந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வக்காலத்தில் 26.6.2018 திரு.மோகன் குமார் என்ற வழக்கறிஞர முன்னிலையில் ராஜம்மாள் கைரேகை வைத்ததாக உள்ளது என்றால் சாட்சி வக்காலத்தை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார். வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரையில் ரேகை ராஜம்மாள் இடவில்லை என்றும் எங்களால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எண் 27 காந்தி நகரில் வாதி சாவித்திரிக்கு வாதியின் மகள் ரம்யா மற்றும் மகன் அமர்நாத் மேற்படி முகவரியில் பிறந்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அமர்நாத்தின் பிறப்பு சான்றிதழில் உள்ள முகவரி ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் முகவரி என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வாதியின் 2ம் மகன் ராம்பிரசாத்தின் பிறப்பு சான்றிதழில் க. எண். 27 காந்தி நகர் என்ற முகவரி என்று சொன்னால் சரிதான். அது ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் முகவரி என்று சொல்வது தவறு. அதில் நிரந்தர முகவரி என்று எண் 27 காந்தி நகர் என்று உள்ளது என்றால் சரிதான். எண் 27 காந்தி நகர் என்பது ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரும் ராஜம்மாளும் நிரந்தரமாக குடியிருந்த முகவரி என்று சொன்னால் சரிதான். 90, 91 வருடத்தில் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரும் ராஜம்மாளும் அன்னியோன்யமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் எந்த கருத்து வேறுபாடும் இல்லாமல் சந்தோசமாக

இருந்தார்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 20 மற்றும் பிவாசாஆ 22 ல்அவ எண். 133/92 என்ற வழக்கை ஓ.ஏ.கே.நாச்சிமுத்து அவர் மனைவி ராஜம்மாள் மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான் அது பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. மேற்படி வழக்கில் 13 ம் பிரதிவாதியாக அவரது மனைவி ராஜம்மாள் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். பிவாசாஆ 22 மற்றும் பிவாசாஆ 23 ல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் பிரிந்து இருப்பதாக அதில் எதுவும் சொல்லப்படவில்லை. மேற்படி தீர்ப்பு நடைமுறைக்கு வந்து விட்டதா என்றால் ஆம் வந்து விட்டது. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் வளர்ப்பு மகள் என்ற அடிப்படையில் வாதி சாவித்திக்கு ராஜம்மாள் சூரம்பட்டியில் டீச்சர்ஸ் காலனியில் உள்ள சொத்தை கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் வளர்ப்பு மகளாக கிரையம் கொடுக்கவில்லை. ஓ.ஏ.கே.நாச்சிமுத்துவின் தம்பி மகளுக்காக என்று கிரையம் கொடுத்துள்ளார். ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் தம்பிக்கு 5 மகள்கள் 1 மகன் உள்ள நிலையில் வாதி சாவித்திரிக்கு மட்டும் ராஜம்மாள் ஏன் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கிரையம் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ராஜம்மாள் தானசெட்டில்மெண்ட் பத்திரமாக கொடுக்கவில்லை. அவ்வாறு சாவித்திரிக்கு கிரையம் கொடுத்த தேதியில் நான் மேஜராக இருந்தேன் என்றால் சரிதான். 6000 சதுரடியை கிரயம் கொடுத்தது சம்மந்தமாக நான் ஆட்சேபணை செய்தேனா என்றால் நான் ஆட்சேபணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து ஓ.ஏ.கே கிருஷ்ணசாமி முதலியார் ஆகியோர் சென்னை மற்றும் ஈரோட்டில் ஜவுளி தொழில் செய்து வந்தார்களா என்றால் 1956 ல் அவர்கள் இருவரும் வேறு ஒரு அய்யங்காருடன் சேர்ந்து மூவருமாக செய்து வந்தார்கள். கிருஷ்ணசாமி முதலியார் மாரிமுத்து நாச்சிமுத்து ஆகியோர் மூவரும் ஜவுளிதொழிலில் பங்குதார்கள் என்றால்

இல்லை. ஈரோடு பிரகாசம் வீதியில் என்ன பெயரில் தொழில் செய்து வந்தார்கள என்றால் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து என்ற பெயரிலும் ராஜம் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரிலும் செய்து வந்தார்கள். அந்த தொழிலை சாவித்திரியின் கணவர் நிர்வாகம் செய்து வந்தாரா என்றால் இல்லை. அவருடைய தொழிலை நான் தொடர்ந்து செய்து வந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை நான் தொழிலாளியாக தான் இருந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அவர் இறப்பிற்கு பின்னிட்டு நான் தான் அந்த தொழிலை செய்து வந்தேன் என்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. நான் தொழிலாளியாகவும் பொறுப்பாளியாகவும் நிர்வாகியாகவும் இருந்தேன். நான் எந்த சூழ்நிலையிலும் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாரின் வளர்ப்பு மகன் என்ற முறையில் செயல்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய திருமணம் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து உயிருடன் இருக்கும் போதே நடந்தது. க.எண்.27, காந்தி நகரில் என் திருமணம் நடக்கவில்லை என்றும் வேறு முகவரியில் நடந்தது என்றால் சரிதான். சென்னிமலையில் எனக்கு திருமணம் நடந்தது. திருமண பத்திரிக்கையிலோ அல்லது குழந்தை பிறப்பு நிகழ்விலோ எண் 27 ல் நான் குடியிருந்ததற்காக ஆவணம் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பிவாசாஆ 8 தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். பிவாசாஆ 8 பத்திரம் பதிவு செய்ய நானும் உடன் சென்றேன். முத்திரை தாள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் ராஜம்மாள் பெயரில் தான் வாங்கப்பட்டது. என் பெயரில் வாங்கப்படவில்லை. மேற்படி முத்திரை தாள் வெங்கடேசன் என்ற பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல ராஜம்மாள் பெயரில் தான் வாங்கப்பட்டது. ராஜம்மாள் பேரில் வாங்கப்பட்டதாக வேறு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

மேற்படி பத்திரம் எழுதும் போது ராஜம்மாளின் வயது 86. மேற்படி பத்திரம் எழுத பத்திர எழுத்தர் மற்றும் சாட்சிகளை நான் தயார் செய்தேனா என்றால இல்லை ராஜம்மாளே தயார் செய்து கொண்டார். சரவணன் என்ற பத்திர எழுத்தரை நான் பார்த்தேன். மேற்படி சரவணன் பத்திர எழுத்தர் ராஜம்மாளின் வயது மூப்பு காரணமாக பத்திரம் எழுதி கொடுக்க மறுத்து விட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய ஆடிட்டர் மூலமாக ராஜம்மாள் ஏற்பாடு செய்ததை டிராப்ட் செய்து கொடுத்ததை ராஜம்மாள் படித்து பார்த்து விட்டு சரவணன் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. பிவாசாஆ 8 பத்திரத்தில் சரவணன் பத்திர எழுத்தராக கையெழுத்து செய்யவில்லை என்றால் சாட்சி பிவாசாஆ 8 ஐ பார்த்து விட்டு சரவணன் கையெழுத்திடவில்லை முகவரி எழுதவில்லை என்று கூறினார். மேற்படி பத்திரம் 87 வயதான ராஜம்மாளே பத்திரத்தை தயாரித்ததாக போலியாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாசாஆ 8 உள்ள சாட்சிகள் எனக்கு வேண்டப்பட்டவர்களா என்றால் இல்லை. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் மற்றும் ராஜம்மாளுக்கு வேண்டியவர்கள். பிவாசாஆ 8 ராஜம்மாளுக்கு காது கேட்காது என்றும் பேப்பரில் எழுதி காட்டினால் தான் தெரியும் என்றால் சரியல்ல. சாட்சிகளை யார் வரவழைத்தார்கள் என்றால் ராஜம்மாள் தான் வரவழைத்தார். சாட்சிகள் யார் யார் வந்தார்கள் என்றால் ரங்கசாமி, சந்திரசேகரன், நடராஜன் ஆகியோர் வந்தார்கள். ராஜம்மாள் மேற்படி பத்திரம் எழுதும் போது நடக்க முடியாமல் இருநதார் என்றால் சரியல்ல நன்றாக இருந்தார். ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது நான் ராஜம்மாளுக்கு பாதுகாப்பாக உடன் சென்றேன். பிவாசாஆ 8 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் கையெழுத்திடவில்லை. பிவாசாஆ 8 அசல் பத்திரத்தை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் பத்திரம் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்ற பிறகு என்னிடம் கொடுத்தார். சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இன்னார் என்று நீருபித்தவர் என்ற இடத்தில் யார் சாட்சி

கையெழுத்திட்டார்கள் என்றால் சந்திரசேகரன், ரங்கசாமி, நடராஜன் கையெழுத்திட்டார்கள்.